Australian Government
Department of Home Affairs

# விசா விண்ணப்பக் கட்டணங்களைத் திரும்பப் பெறுதல் அல்லது தள்ளுபடி பெறுதல்

## விசா விண்ணப்பக் கட்டணங்களைத் திரும்பப் பெறுதல்

நீங்கள் விசா விண்ணப்பத்திற்கு அல்லது விசா நீட்டிப்புக்கு பணம் செலுத்தியிருந்து, கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டு இருந்தால், நீங்கள் உங்கள் விசா விண்ணப்பக் கட்டணத்தை (VAC) திரும்பப் பெற அல்லது தள்ளுபடி பெறத் தகுதிப் பெறக்கூடும்.

உங்கள் அசல் விசா விண்ணப்பக் கட்டண ரசீதில் 'பணம் செலுத்துபவராக' நீங்கள் இருந்தால் மட்டுமே VAC பணத்தைத் திரும்பப்பெறக் கோர முடியும்.

கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் VAC பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கைப் படிவத்தைப்பயன்படுத்தி உங்கள் பணத்தைத் திரும்பப் பெறக் கோரிக்கை விடுத்திடுங்கள்.

விசா விண்ணப்ப கட்டணத்தை (VAC) திரும்பப் பெறுவதற்கான பிற விதிகள் பற்றிய மேலதிகத் தகவலுக்கு பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

உங்கள் விசா விவரங்களையும் நிபந்தனைகளையும் VEVO -ஐப் பயன்படுத்திச் சரிபார்க்கலாம்.

## தற்காலிகத் திறன் பற்றாக்குறை விசா அல்லது தற்காலிக வேலை (திறன்மிகு தொழிலாளர்) விசா (துணைப்பிரிவுகள் 482 மற்றும் 457)

நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்து, தற்காலிகத் திறன் பற்றாக்குறை அல்லது தற்காலிக வேலை (திறமையான) விசாவை வைத்திருந்து, அது 1 பிப்ரவரி 2020 அன்று அல்லது அதற்குப் பிறகு முடிந்து போயிருந்தால், பின்வரும் சூழலில் வேறொரு தற்காலிகத் திறன் பற்றாக்குறை (துணைப்பிரிவு 482) விசா விண்ணப்பத்திற்கு VAC தள்ளுபடியைப் பெற நீங்கள் தகுதி பெறுவீர்கள்:

- உங்கள் விசா காலாவதியாவதற்கு முன் கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக உங்களால் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியவில்லை என்றால், அல்லது
- நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்து, பிறகு அங்கிருந்து புறப்பட்டு வந்திருந்து, கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக உங்கள் விசா காலாவதியாகும் முன்பு உங்களால் அவுஸ்திரேலியாவுக்குத் திரும்ப முடியவில்லை என்றால்.

விண்ணப்பதாரர்கள் ஒரு செல்லுபடியாகும் நியமனத்தை வைத்திருக்க வேண்டும். விண்ணப்பங்கள் 31 டிசம்பர் 2022-க்கு முன் பதிவு செய்யப்பட வேண்டும்.

## விடுமுறையில் பணிபுரிபவர்கள் (Working Holiday Makers)

19 ஜனவரி 2022 மற்றும் 19 ஏப்ரல் 2022 க்கு இடையில் அவுஸ்திரேலியாவிற்கு வரும் விடுமுறையில் பணிபுரிபவருக்கான (WHM) விசா வைத்திருப்பவர்கள் VAC பணத்தைத் திரும்பப் பெறத் தகுதியுடையவர்கள். மேலதிகத் தகவலுக்கு, பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

பின்வரும் நிபந்தனைகள் உங்களுக்குப் பொருந்தினால், நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்தபடியே விசா கட்டணம் ஏதும் இல்லாமல் இன்னொரு WHM விசாவிற்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் அல்லது VAC பணத்தைத் திரும்பப்பெறக் கோரலாம்:

- 20 மார்ச் 2020க்கு முன், கோவிட்-19 பாதிப்புக்குள்ளான காலக்கட்டத்தில் உங்களுக்கு WHM விசா வழங்கப்பட்டது என்றால்
- நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்கும்போது உங்கள் WHM விசா 20 மார்ச் 2020 முதல் 31 டிசம்பர் 2021-க்கு இடையில் காலாவதி ஆகியிருந்தால், மற்றும்
- உங்கள் WHM விசாவில் நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்யவில்லை என்றால் அல்லது உங்கள் WHM விசா முடிவடைவதற்கு முன்பு அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டு விட்டீர்கள் என்றால்.

தகுதி பெற்றிருந்தால், 1 ஜுலை 2021 முதல் 31 டிசம்பர் 2022 வரையான காலக்கட்டத்தில் WHM விசாவிற்கு கட்டணம் ஏதும் இல்லாமல் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். மேலதிகத் தகவலுக்கு, விடுமுறையில் பணிபுரிபவர்களுக்கான (Working Holiday Makers) திட்டம் - சமீபத்திய செய்திகள் என்பதைப் பார்வையிடவும்.

அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தபடி விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லாமல் WHM விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கான வயது வரம்பை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றால், நீங்கள் VAC பணத்தைத் திரும்பப்பெறக் கோரலாம். இதைச் செய்ய, கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் VAC பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கைப் படிவத்தைப் பயன்படுத்தவும். பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான உங்கள் கோரிக்கையை நாங்கள் மறுத்தால் மறுபரிசீலனை எதுவும் கிடையாது.

அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்தபடி VAC ஏதும் இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் VAC திரும்பப் பெறும் கோரிக்கைகளை 31 டிசம்பர் 2022-க்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5 மார்ச் 2022 முதல், நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருந்து, மேலும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராக இருந்தால், அவுஸ்திரேலியாவில் இருந்தபடியே VAC ஏதும் இல்லாமல் WHM விண்ணப்பத்தை நீங்கள் சமர்ப்பிக்கலாம். அவுஸ்திரேலியாவில் இருந்தபடியே விசா தகுதி VAC ஏதும் இல்லாமல் WHM விசாவிற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய மேலதிகத் தகவல்கள் சமீபத்திய செய்திகளில் கிடைக்கும். வயது வரம்பை பூர்த்தி செய்யாத காரணத்தால், அவுஸ்திரேலியாவில் இருந்தபடியே VAC விசாவிற்கு விண்ணப்பிக்க தகுதியில்லாத WHM விண்ணப்பங்களுக்கு VAC ஏதும் திருப்பிக் கொடுக்கப்படாது.

## மாணவர்கள்

நீங்கள் பெப்ரவரி 1, 2020 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒரு மாணவர் விசா வைத்திருந்து கோவிட்-19 தாக்கங்கள் காரணமாக உண்மையான விசா செல்லுபடிக் காலத்திற்குள் உங்கள் படிப்பை உங்களால் முடிக்க முடியாமல் போயிருந்தால், ஒரு கூடுதல் மாணவர் விசா விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க உங்களுக்கு அனுமதிக்கும் வகையில் விசா விண்ணப்பக் கட்டணத்தை நாங்கள் தள்ளுபடி செய்வோம். நீங்கள் பின்வரும் தகுதியைப் பெற்றிருந்தாலும் இதில் உள்ளடங்கும்:

- பயணக் கட்டுப்பாடுகளின் காரணமாக உங்களால் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முடியாததால் உங்கள் படிப்பு தாமதம் ஆகியிருந்தால்
- பகுதிநேரப் படிப்புச் சுமையைக் குறைப்பதற்கு நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தால்
- உங்கள் வேலை தொடர்பான பயிற்சி அல்லது வேலைவாய்ப்புகளை உங்களால் முடிக்க முடியாமல் போயிருந்தால்.

இந்த நடவடிக்கை, சாதாரண காரணங்களுக்காக (நீங்கள் ஒரு கோர்ஸ் அல்லது படிப்புப் பிரிவில் தேர்ச்சி பெறாதது, தனிப்பட்ட காரணங்களுக்காக தாமதம் ஆகியிருப்பது அல்லது உங்கள் கல்விச் சுமையை நீங்கள் தாமாக முன்வந்து குறைத்திருப்பது போன்றவை இதில் அடங்கும்) ஒரு புதிய மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்கின்ற மாணவர்களுக்குப் பொருந்தாது.

உங்கள் விண்ணப்பத்திற்கான கட்டணத் தள்ளுபடி பரிசீலிக்கப்பட வேண்டுமெனில் நீங்கள் ஒரு மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் பூர்த்தி செய்த படிவம் 1545 கோவிட்-19 தாக்கத்திற்கு உள்ளான மாணவர் என்ற சான்றிதழை உங்கள் கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் கட்டணத் தள்ளுபடிக்கு விண்ணப்பிப்பவராக இருந்தால், முதலில் கட்டணத் தள்ளுபடி சரிபார்க்கப்பட வேண்டும் என்பதால் இணைப்பு விசா தானாகவே வழங்கப்பட மாட்டாது.

இந்தத் தள்ளுபடி, VAC-க்கு மட்டுமே பொருந்தும்.

மேலும், தற்போது அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்து 19 ஜனவரி 2022 மற்றும் 19 மார்ச் 2022 ஆகிய திகதிகளுக்குள் வருகைத் தருகின்ற, மாணவர் விசா வைத்திருப்போர் VAC-ஐ மீளப்பெற்றுக்கொள்ள தகுதியுடைவர்களாக இருக்கலாம். VAC பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றிய மேலதிகத் தகவலுக்கு, பணத்தைத் திரும்பப் பெறுதல் என்பதைப் பார்வையிடவும்.

## வருகையாளர் (துணை வகுப்பு 600)

பின்வரும் தகுதி உங்களுக்கு இருந்தால், நீங்கள் புதிய வருகையாளர் (துணைப்பிரிவு 600) விசாவிற்கு (அடிக்கடி பயணிக்கும் ஸ்ட்ரீம் தவிர) எந்தக் கட்டணமும் இல்லாமல் (VAC தள்ளுபடி உடன்) விண்ணப்பிக்கலாம்:

- நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருக்க வேண்டும்
- நீங்கள் வருகையாளர் (துணைப்பிரிவு 600) விசாவை வைத்திருக்க வேண்டும் அல்லது முன்பு வைத்திருந்திருக்க வேண்டும், மேலும் அந்த விசாவை:
    - 21 மார்ச் 2020-க்கு முன், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருக்கும்போது நாங்கள் வழங்கி இருக்க வேண்டும்
    - 20 மார்ச் 2020 மற்றும் 30 ஜூன் 2022-க்கு இடையில் காலாவதி ஆகியிருக்க வேண்டும் அல்லது காலாவதியாக வேண்டும்
    - உங்கள் விசா பல நுழைவு விசா அல்லது ஒற்றை நுழைவு விசாவாக இருக்க வேண்டும், மேலும் அதனை நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்யப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும்.

உங்கள் புதிய விண்ணப்பத்தை ImmiAccount மூலம் 31 டிசம்பர் 2022-க்குள் ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

கோவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள முந்தைய வருகையாளர் விசாவை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பதை உங்கள் ஆன்லைன் விண்ணப்பப் படிவத்தில் எங்களிடம் தெரிவிக்க வேண்டும். உங்கள் தகுதியை நாங்கள் உறுதிசெய்தால், உங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது நீங்கள் VAC செலுத்த வேண்டியதில்லை.

உங்கள் VAC தள்ளுபடி கொண்டு ஒருமுறை மட்டுமே விண்ணப்பிக்க முடியும். உங்கள் விசாவை நாங்கள் மறுத்தாலும், நீங்கள் இரண்டாவது தள்ளுபடிக்குத் தகுதியற்றவர் ஆவீர்.

## வருங்காலத் திருமண விசா

2020 -இன் பிற்பகுதியில்/2021 -இன் முற்பகுதியில், கோவிட்-19 பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முடியாத வருங்காலத் திருமண (துணைப்பிரிவு 300) விசா வைத்திருப்பவர்கள், இத்தகைய விசாவை முன்பு வைத்திருந்தவர்கள் மற்றும் விசா விண்ணப்பதாரர்கள் ஆகியோருக்கு ஆதரவாக மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

29 அக்டோபர் 2021 அன்று, விசா செல்லுபடியாகும் காலங்கள் மற்றும் VAC-ஐ திரும்பப் பெறுதல் ஆகியவற்றுக்கு மேலும் நீட்டிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கோவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதில் தொடர்ந்து சிரமங்களை எதிர்கொள்ளும் வருங்காலத் திருமண விசா வைத்திருப்பவர்களுக்கு இவை துணைபுரிகின்றன.

### விசா நீட்டிப்புகள்

10 டிசம்பர் 2020 அன்று, வருங்காலத் திருமண விசா வைத்திருப்பவர்கள் அல்லது வருங்காலத் திருமண விசாவை வைத்திருந்து, இந்த திகதியில் அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருப்பவர்கள் அல்லது 6 அக்டோபர் 2020 மற்றும் 10 டிசம்பர் 2020-க்கு இடையிலான காலக்கட்டத்தில் வருங்காலத் திருமண விசாவை வைத்திருப்பவர்கள் ஆகியோரின் விசா செல்லுபடியாகும் காலம் 31 மார்ச் 2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

29 அக்டோபர் 2021 அன்று, துணைப்பிரிவு 300 என்பவற்றின்படி வருங்காலத் திருமண விசாவை வைத்திருந்தவர்கள் மற்றும் 15 செப்டம்பர் 2021 அன்று அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்த வருங்காலத் திருமண விசா வைத்திருப்பவர்கள் ஆகியோரின் விசா செல்லுபடியாகும் காலம் 31 டிசம்பர் 2022 வரை நீட்டிக்கப்பட்டது.

உங்கள் விசா விவரங்களையும் நிபந்தனைகளையும் VEVO -ஐப் பயன்படுத்திச் சரிபார்க்கலாம்.

## விசா நீட்டிக்கப்பட்டவர்கள் விசா விண்ணப்பக் கட்டணத்தை திரும்பப் பெறுவது தொடர்பான செய்திகள்

கோவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக, விசா வைத்திருப்பவர் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்து தங்கள் துணையாளரை திருமணம் செய்துக்கொள்வதை பாதித்திருந்தால், அவரது விசா விண்ணப்பக் கட்டணம் (VAC) திருப்பிக் கொடுக்கப்படும்.

உங்களின் வருங்காலத் திருமண விசா செல்லுபடியாகும் காலம் 10 டிசம்பர் 2020 அன்று நீட்டிக்கப்பட்டிருந்தால், VAC-ஐ செலுத்துபவர் பின்வருவனவற்றை பூர்த்தி செய்யும் பட்சத்தில் பணத்தைத் திரும்பக் கோரலாம்:

- இந்த விசாவை வைத்திருப்பவராக நீங்கள் 10 டிசம்பர் 2020-க்குப் பிறகும்,
- பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையை சமர்ப்பிக்கும்போதும், அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்யாமல் இருந்திருக்க வேண்டும், ஒன்று:
  - உங்கள் விசா காலாவதி ஆகியிருக்க வேண்டும் அல்லது உங்கள் கோரிக்கையின் பேரில் ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும் அல்லது
  - உங்கள் விசா தற்போது நடைமுறையில் இருந்து, உங்கள் விசாவை ரத்து செய்யும்படி அமைச்சரிடம் கேட்டிருக்க வேண்டும்.

29 அக்டோபர் 2021 அன்று அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களின் ஒரு பகுதியாக உங்களின் வருங்காலத் திருமண விசா செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தால், உங்களுக்கான VAC-ஐ செலுத்தியவர் பின்வருவனவற்றை பூர்த்தி செய்யும் பட்சத்தில், பணத்தைத் திரும்பக் கோரலாம்:

- நீங்கள் வருங்காலத் திருமண விசாவை வைத்திருந்து, 15 செப்டம்பர் 2021 அன்று அவுஸ்திரேலியாவுக்கு வெளியே இருந்திருக்க வேண்டும்.
- இந்த விசாவை வைத்திருப்பவராக நீங்கள் 15 செப்டம்பர் 2021-க்குப் பிறகு அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்யாமல் இருந்திருக்க வேண்டும்.
- பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கையின் போது உங்கள் விசாவை ரத்து செய்யும்படி அமைச்சரிடம் நீங்கள் கேட்டதால் உங்கள் விசா ரத்து செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பொதுவாக, அசல் VAC ரசீதில் 'பணம் செலுத்துபவராக' காட்டப்படும் நபரால் மட்டுமே பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும். பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகள் 31 டிசம்பர் 2022-க்குள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உங்கள் விசா இன்னும் நடைமுறையில் இருந்தால், பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு முன், உங்கள் வருங்காலத் திருமண (துணைப்பிரிவு 300) விசாவை ரத்துசெய்யக் கோருவதற்கு முதலில் உங்கள் ImmiAccount -ஐப் பயன்படுத்த வேண்டும்.

நீங்கள் VAC பணத்தைத் திரும்பப் பெறத் தகுதி பெற்றிருந்தால், கோவிட் -19 பயணக் கட்டுப்பாடுகள் VAC பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கைப் படிவத்தைப் பயன்படுத்தவும்.

பின்வரும் சூழலில், VAC பணத்தைத் திரும்பப் பெற முடியாது:

- உங்கள் வருங்காலத் திருமண விசா, அமைச்சரால் ரத்து செய்யப்பட்டு இருந்தால் (அதை ரத்து செய்யுமாறு நீங்கள் கோரி இருந்தால் தவிர) அல்லது
- நீங்கள் பார்ட்னர் (துணைப்பிரிவு 801) விசாவிற்கு விண்ணப்பத்திருந்து, வருங்காலத் திருமண விசாவை வைத்திருந்ததால் குறைக்கப்பட்ட VAC செலுத்தி இருந்தால் அல்லது
- அந்த நேரத்தில் உங்கள் விசா காலாவதி ஆகி, நீங்கள் அல்லது உங்கள் ஸ்பான்சர் நீங்கள் இனி திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என்று துறைக்கு அறிவுறுத்தியிருந்தால்

## வருங்காலத் திருமண விசாவை முன்பு வைத்திருந்தவர்களுக்கும் அவுஸ்திரேலியாவில் தங்கள் துணையை திருமணம் செய்துக்கொள்ள முடியாதவர்களுக்கும் விசா விண்ணப்பக் கட்டணங்களைத் திருப்பிக் கொடுப்பது தொடர்பானவை

உங்கள் வருங்காலத் திருமண விசா 20 மார்ச் 2020 மற்றும் 5 அக்டோபர் 2020 க்கு இடையில் காலாவதியாகி, அப்போது நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்தால், விசா விண்ணப்பக் கட்டணத்தை (VAC) செலுத்துபவர் VAC-ஐ திரும்பப் பெறத் தகுதியுடையவராக இருக்கலாம்.

கோவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக உங்கள் விசா நிறுத்தப்பட்டு, அவுஸ்திரேலியாவில் உள்ள உங்கள் ஸ்பான்சரை உங்களால் திருமணம் செய்ய முடியாமல் போனால், VAC செலுத்துபவர் VAC பணத்தைத் திரும்பப் பெற தகுதியுடையவராக இருக்கலாம். தனிமைப்படுத்தல் விதிமுறைகள், மாநில ஊரடங்குகள் அல்லது மாநிலங்களுக்கு இடையேயான பயணக் கட்டுப்பாடுகள் ஆகியவை இதில் அடங்கும். நீங்கள் உங்கள் விசாவில் அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் செய்திருந்தால், VAC செலுத்துபவர் பின்வரும் விதிகளின் கீழ் பணத்தைத் திரும்பப் பெறத் தகுதியுடையவராக இருக்கலாம்:

- நீங்கள் அவுஸ்திரேலியாவில் இருக்கும்போது உங்கள் விசா 20 மார்ச் 2020 மற்றும் அக்டோபர் 5, 2020-க்கு இடையில் காலாவதி ஆகியிருந்தால், அல்லது
- உங்கள் விசா 10 செப்டம்பர் 2021 அன்று நடைமுறையில் இருந்து, நீங்கள் பணத்தைத் திரும்பப்பெறக் கோரும் நேரத்தில் உங்கள் விசா நடைமுறையில் இல்லை என்றால்.

கோவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளினால் பின்வரும் காரணங்களுக்காக உங்கள் ஸ்பான்சரை நீங்கள் திருமணம் செய்யவில்லை என்றால், பணத்தைத் திரும்பப் பெற முடியாது:

- உங்கள் முன்மொழியப்பட்ட திருமணத்தில் கலந்துகொள்ளும் வரம்பிடப்பட்ட விருந்தினர்கள் மட்டுமே கலந்துக் கொள்ள முடியும் என்பதால்,
- விருந்தினர்கள், அல்லது குறிப்பிட்ட விருந்தினர்கள், உங்கள் முன்மொழியப்பட்ட திருமணத்தில் கலந்து கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டார்கள் என்பதால், அல்லது
- நீங்கள் மற்றும் உங்கள் ஸ்பான்சர் விரும்பும் நேரத்தில் அல்லது இடத்தில் திருமணத்தை நடத்த முடியவில்லை என்பதால்.

பொதுவாக, அசல் VAC ரசீதில் 'பணம் செலுத்துபவராக' காட்டப்படும் நபரால் மட்டுமே பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிக்க முடியும். நீங்கள் VAC பணத்தைத் திரும்பப் பெறத் தகுதி பெற்றிருந்தால், கோவிட் -19 பயணக் கட்டுப்பாடுகள் VAC பணத்தைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கைப் படிவத்தைப் பயன்படுத்தவும்.

பின்வரும் சூழலில், VAC பணத்தைத் திரும்பப் பெற முடியாது:

- உங்கள் வருங்காலத் திருமண விசா, அமைச்சரால் ரத்து செய்யப்பட்டு இருந்தால் (அதை ரத்து செய்யுமாறு நீங்கள் கோரி இருந்தால் தவிர) அல்லது

- நீங்கள் பார்ட்னர் (துணைப்பிரிவு 801) விசாவிற்கு விண்ணப்பத்திருந்து, வருங்காலத் திருமண விசாவை வைத்திருந்ததால் குறைக்கப்பட்ட VAC செலுத்தி இருந்தால் அல்லது
- அந்த நேரத்தில் உங்கள் விசா காலாவதி ஆகி, நீங்கள் அல்லது உங்கள் ஸ்பான்சர் நீங்கள் இனி திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என்று துறைக்கு அறிவுறுத்தியிருந்தால்.

வருங்காலத் திருமண விசாவை முன்பு வைத்திருப்பவர்களுக்கு, அடுத்தடுத்த வருங்காலத் திருமண விசா அல்லது பார்ட்னர் விசா விண்ணப்பங்களின் செயலாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்களைச் செயலாக்கும் நேரம் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா மற்றும் விசாவிற்கான அனைத்துத் நிபந்தனைகளையும் பூர்த்திசெய்கிறதா என்பதைப் பொறுத்தே இருக்கும்.

## வருங்காலத் திருமண விசா விண்ணப்பதாரர்கள்

கோவிட்-19 தொடர்பான பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைய முடியாத வருங்காலத் திருமண விசா விண்ணப்பதாரர்களுக்கு உதவும் வகையில், 27 பிப்ரவரி 2021 முதல் வழங்கப்படும் வருங்காலத் திருமண விசாக்கள் 9 முதல் 15 மாதங்கள் வரை விசா செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டிருக்கலாம். இதற்கு முன்பு இந்த விசா 9 மாத நிலையான செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டிருந்தது. 27 பிப்ரவரி 2021 அன்று அல்லது அதற்குப் பிறகு வழங்கப்படும் வருங்காலத் திருமண விசாவிற்கான செல்லுபடியாகும் காலம் விண்ணப்பதாரரின் சூழ்நிலையைப் பொறுத்தது.

உங்கள் விசா விவரங்களையும் நிபந்தனைகளையும் VEVO -ஐப் பயன்படுத்திச் சரிபார்க்கலாம்.